கடவுள் துணை.

நூதன விவேக

லாஇரிச்சிந்து.

இவை

மஞ்சகுப்பம் ஜில்லா ஒல்டவுன்

கூடலூர்

கூ. பெ. வீரபத்திர படையாக்ஷி

அவர்களால்

சிங்கைமாநகர் வாட்ட்லூர் ஸ்திரீட்டில்

இயற்றப்பட்டதை

சிறுமணவூர்,

முனிசாமி முதலியார்

அவர்களால் பார்வையிடப்பட்டு

தமது


சென்னை சூளை,

சிவகாமி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

இதன் விலை அணா 1.



உ

கடவுள் துணை.

நூதன விவேக

லாகிரிச் சிந்து.

விநாயகர்துதி வெண்பா.

இத்தரணிலேவசிக்கு மேற்கையுளமானிடர்க்குப்
புத்திதரவவரவர் புராணமறை—யெத்தனையோ
இருப்பதையும்பார்த்துவிளக் கேற்றிணர்வீழ்வோர்கதை
வுரைப்பதற்கு வைங்கரன்றாள் துணை.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

நேசரோ கேளீர் சகலமதத்துள்ள
நிபுணரோ பாரீர்

அநுபல்லவி.

ஆசையாய் மதுதனை யருந்திட விரும்புவோர்
மோசங்க ளாவதை மொழிகின்றே னிப்போது நேச

சரணங்கள்.

(1) மாநிலத்திற்சென்மம் மனிதராயுதித்தநல்
மார்க்கமறிந்துபின் மதிகெடச்சிலபேர்கள்
ஞானிலத்தவிற்கள்ளை நாடியேகுடித்திட
நண்பர்க்குநண்பர்கள் நயமாயுரைப்பதைச்
சொல்லலாமென்றே-வாய்திறந்தாலது-தொல்லைதானின்றே
வருமென்றுபயந்திந்த வையகமுள்ளோரின்
மலர்ப்பதம்வணங்கியான் வார்த்தைபலுக்கநல்
லரும்பொருள்மதுதனைக் கழித்திடுமென்பரின்
யடிமலர்போற்றினே னகிலத்தில்வாழ்ந்திடும் நேச

(2) கனதன வான்களே காலத்தின்கோலமோ
கலியுகப்புத்தியோ கடவுளின்கிருபையோ
மனந்தடுமாறிட மலரயன்விதித்ததோ
மதுவெனும்லாகிரியின் மகிமையோவெகுபேரைக்
கேட்டிடத்திரம்-கள்ளுசாராயத்தை-விட்டிடாநேரம்
இல்லையேதினமவ ரிருக்கின்றபணமதை
யெடுத்துமேமகிட்சியா யின்பமாய்ச்சாராயம்
புல்லறிவால்கடைப் புகுந்துமேகுடித்திடப்
புறப்படும்பயணத்தின் புகட்சியையென்சொல்வேன் நேச

(3) அவனியிற்காகம்போ லதிவேகமாகவே
யற்பசுகக்கள்ளை யருந்திடப்போகையில்

சிவனைப்பணிந்திடுஞ் சிறுத்தொண்டர்தமைப்போல
சீராயவர்களுஞ் செய்கின்றமார்க்கங்கள்
அறிந்திடுவீரோ-முதல்முதல்கடப்பதை-தெறிந்திடுவீரோ
ஒருபுட்டிவாங்க வொடுக்கிப்பதுங்கிசுவ
ரோரமாய்முக்காட்டை யுடுத்திதன்முகமூடி
தெருவினிலொருவர்க்குந் தெரிந்திடாபடிக்குப்பின்
செப்புங்கடைக்குள்ளே சென்றவர்சொல்வதை நேச

(4) ஐயாகடைதனி லொருபுட்டிகள்தனை
யளந்துதான்கல்நிமி லாரும்வருமுன்னே
கொடியாமற்றாப்பிட்டு செல்கின்றேன்கடைவிட்டு
சீக்கிரமனுப்பிடச் செய்குவாய்மனம்வைத்து
என்றவருரைக்க-கடைக்காரப்போது-நன்றுடன்கொடுக்க
வெட்கியேகுடித்துநல் மயக்கவசந்திடப்பின்
மதுதானொருபுட்டி மகிழுடன்பெற்றுமே
யொக்கரமாயவ ருட்கார்ந்துசாப்பிட்டு
படமோன்சிறுகதை யுளாத்திடமுயல்வதை நேச

(5) கேளாங்கள்மதுதனைக் கனவிலும்நினையாத
கீர்த்தியின்பெரியோரோ நாற்றிசைதன்னிலும்
ஆருமாசாரியோ லறிகதிரத்துடன்
யற்புதப்பாடலு மனவிலாயாட்டமுஞ்
செய்திடகூடி-பின்னும்பலபேரை-வைதிடவோடி
சாராயமொருடிராஞ் சாப்பிட்டபோதையால்
சங்கைகளற்றுமே மங்கையர்வீதிக்கு
கோரகப்போய்காமம் நிறைவேறலாமென்று
திரைத்தங்குபோதையில் சேர்ந்திட்டவதிசயம் நேச

(6) என்னென்றுசொல்வேனல் லிஷ்டரின்மதிகெட
யிதற்குமுற்காலத்தி லேரணியறுயிர்தனை
கண்ணகர்வைகுந்த நாதரும்வாங்கிட
காசிப்பெடுத்தாற்போல் ஞானிலத்தோருக்கு
பிறந்ததே-யென்னை-புலையுடனிச்சலும்-திறந்ததோகண்ணை
ஐயையோமாமுன்றி லந்தரப்பாலென்று
உவனியிலுதித்ததை யறிந்துமேகுடித்ததால்
மைவிழியார்தனின் மனைக்குளேசென்றநல்
வார்த்தைப்புல்வதை வசனிக்கக்கூடுமோ நேச

(7) பின்னும்லாகிரிதன்னால் பெருமையாய்வார்த்தைகள்
பேசுமில்லாமலே பேசிமெய்ம்மேனியில்
கன்னியானப்போதன் கருத்துமிசைந்தாற்போல்
களவனேயென்றுமென் கஷ்டங்கள்தீர்த்திடப்
பொருள்ளவாயென்றே-சொல்வாய்முடிமுன்-தருகிறேனின்றே
தைரியமாய்ச்சொல்லி தன்வீடுதருகையில்
தந்திரமொழிப் புத்தியுக்குறைவாகி
கைசோர்ந்துமெய்சோர்ந்து காலடிபிரளவுங்
கன்றுக்கன்னாக்கும்ப கர்ணன்போலானதை நேச

(8) மிடியர்காலத்தினில் வெறியர்போலெழுந்துதன்
மேனியினைசுநியும் மிகவுநற்றலைநோயும்

குடியிருற்கைகாரி   கூத்தியார்க்கழித்ததும்
கூர்மையாயோசித்துக்   குணமதைநிந்தித்து
இனிதொடேன்கள்ளே-சாராயகடைக்குயான்-தணிவுடனுள்ளே
போகமாட்டேனிது   பொய்யல்லநிசமென்று
பூர்த்தியாய்நவின்றப்பின்   பொழுதஸ்தமானதும்
மோகக்கவலையில்   மூழ்கினர்போலவே
முன்செய்தகோலமாய்   முழுதுஞ்செய்கின்றதை   நேச

(9) யாலயிலேயைந்து   மணிநேரமானாலும்
மாராட்டமாய்க்கள்ளு   மதுகாந்தமிழுப்பதின்
கோலர்தையாணிக்கு   கூறவுமுடியுமோ
குலங்கெட்டுப்போகயிப்   குவலயமீதிலே
பாதகமார்க்கு-முன்னோர்களாலின்ற-வேசத்திலுணர்ந்து
ஏனோவினந்நிலம்   யிச்சைய ய்லாக்கிரி
யிபல்பாயருந்தியும்   யெல்லோர்நகைக்கவும்
தானோன்மதிகெடத்   தகுந்தபந்தயங்கட்டுக்
தன்மைபோற்சிலர்செய்யத்   தந்தானோவிதிபிர்மன்   நேச

(10) பிரம்மனுமீரொட்டுப்   பிசகில்லாவயதகதைப்
பேயுடன்யாடிட்ட   பித்தருருவைப்படி
மர்மமில்லாமலே   மார்க்கண்டர்க்கெழுதின
வன்மையும்பொய்யோசொல்   மானிலம்வாழ்வோரோ
விதிதனைப்போக்க-மார்க்கண்டனெடுத்தநல்-மதியல்லோயேற்க
இருக்கதாயில்லாம   லின்றுமனேகம்பேர்
யிதைப்போல்தன்மதிகாடி   யிருந்துவாழ்ந்தோர்கதை
விருப்பமாய்ச்சுருதியில்   விபரமுங்கண்டோர்க்கு
வீரபத்திரன்சொல்ல   வீண்ஞாயமல்லவோ   நேச

நொண்டிச்சிந்து.

தனனாய்த் தனதனனா தனனத் தனனதன தனதனனா

கலியுகப்பெரியோர்களே-வுங்கள்-கழலிணைக்கதியென்றே விழுந்தயிந்த-அலைகடல்சூழுலகில்-சிலபேர்கள்-ளறிவதுமழுங்கியே திரிபவரில் - யானுமொருவனையா-பலநூல்களாராய்ந்தபுலவன்போல் நேராய்ப்பின்னுங்-கானமயிலொளிவுச்-சிறையென்று-காட்டிடவான்கோழிகாட்டங்கொண்டாற்போல்-புல்லறிவினிற்சிறந்தோன்-சிறுகதைப்-புகலிடமனங்கொண்டேன் - வகையுடனே-எல்லோருட்பிழைபொறுக்க-வெந்த - னிருகரங்கூட்டியே பெருவந்தனந்-செய்தேனுன்மென்மேலும்-யிந்த-லோகத்தினிற்கெடுமதி யகற்றச்சொல்லுவேன்-வைதாலுமடித்தாலும்-பொறுத்திட-வந்தருள்வீரபத்ரன் சிந்தைமெலிந்த-விபரத்தாற்சிலபேனைக்-கேட்டிட - வேண்டாஞ்சாராயங்கள்ளைத்தீண்டாமலும்-பரிவுதனைப்போல-கடவுளைத்-தழுவியேயருள்பெற யழுதிடவே - முக்காலும்பணிந்துகொண்டேன்-யிந்த-மொழியைப்போல்நடப்பவ ரிழிவில்லாமல் - பிற்காலஞ்சுகமாக-கடவுளால்-பெற்றிடலாமையா நற்நெதியை-சொன்னேனிதுவுண்மை-கெட்டுப்-தொல்லையைத்தருகிற யெல்லாவஸ்துர் - தின்னுதிரன்பர்களே-ஆண்டவன்-திருவடிபெறமதிக் காமடனே - கொள்ளுவீர்மானிடரோ-நன்றாய்க்-குவலயமீதில்பெருங் கவலையில்லாமற்-றன்னலாங்காலங்களை-அதினால்-சான்றோரொனும்பெயரால் யின்றோர்க்கழக-தந்தின தனதனனா தனனத் தனனதன தனனா.

(வேறுவிதம்)

நன்னே நன்னாநன்னா நன்னே நன்னாநன்னா நன்னே

வேண்டாமையாகுடி வேண்டாமையா கள்ளு
வேண்டாமையாகுடிக்க வேண்டாமையா
ஆண்டவனைத்துதி செய்யுமையா கெட்ட
அற்பசகத்திற்றிச்சை வையாதையா — வே

சாராயமுங்கள்ளுங் குடியாதையா அதைச்
சாப்பிட்டாலேவெகு தொல்லையையா
பூராயமாய்வார்த்தைப் பேசிடுவாய் அய்யயா
போனவிடத்திலபுத்தி மாறிடுவாய் — வே

மாறினமபினியைத் தின்னாதையா பெரு
மயக்கத்தால்கெஞ்சா குடியாதையா
யோசனைசெய்துநீ பாருமையா வுன்னை
யுலகோர்நகைக்காமற் றேடுமையா — வே

சீமைசாராயக்கடைச் செல்லாதையா பணம்
சிலவுமதிகமாக நேருமையா
பூர்வீகத்துள்ளோர் புகன்றதையா பல
புராணங்களிலேநன்றாய்ப் பாருமையா — வே

போதைதரும்வஸ்து நீக்குமையா வுன்றன்
புத்தியைச்சீர்திருத்த நாடுமையா
தீதாகப்பிறர்மனைச் செல்லாதையா மேலுந்
திருட்டுத்தனமாய்பெண்ணைச் சேராதையா — வே

சூதாட்டமொருக்காலுஞ் செய்யாதையா பொருள்
தோற்றுலதிகதுன்பங் காட்டுமையா
வேசியைநாய்கடன் கேட்குமையா புத்தி
வீட்டிலுள்ளதைவிற்கச் செய்யுமையா — வே

களங்களவுசெய்ய நாடுமையா அப்போ
கண்டோர்பிடித்துடனே சேர்ப்பாரையா
பின்னப்படவுனைப் பேசியையா சகல
பேர்களுங்கூடிநன்றாய்க் கொல்வாரையா — வே

ஜென்மமெலியஅடி பட்டுமையா பின்னுஞ்
ஜெயிலுக்குளேகவு மாகுமையா
கன்மவினையோவென்று யெண்ணுமையா அங்கே
கல்லையுடைக்கும்படிச் சொல்வாரையா — வே

குதின்கடவடக்கை கண்டவாயா கெட்டச்
சகத்தைத்தருவனையும் பார்த்திலாயா
காதல்கொண்டேநீ திரியாதையாபெருங்
கஷ்டமெடுக்கும்படிக் கொள்ளுமையா — வே

பஞ்சமாபாதக மென்பதையா அதை
பார்த்திடவேறுமென்றாற் கேளுமையா
கஞ்சாவபினிகள்ளுஞ் சாப்பிடாதீரையா அது
காட்டுமுனக்குப்பாவம் பார்ப்பீரையா — வே

பதவிநான்கென்றுமுன்னோர் பகுத்தாரையா அதின்
பயனையுணர்ந்தால்மோட்ச மாகுமையா

மதுவினாலேகெட்டுப் போகாதையா யிந்த
மானிலவாழ்வுபொய் யாகுமையா வே
பூமிதனிற்றினம் பொய்களையேசொல்லிப்
போதையருந்துவதைத் தள்ளுமையா
நேமமதாய்வீர பத்ரனையா யின்றும்
நிகழ்த்துங்கொம்மிப்பாடல் பாருமையா வே

கொம்மிப்பாடல்.

கொம்மியடிபெண்கள் கொம்மியடி மது
குடித்துவீணாய்த் திரிவோர்கதைச்
செம்மையாய்ப்பாடி யடித்திடவே நல்ல
செல்வக்கணபதி காப்பாமே. (1)
கார்ர்ப்பதற்கைக்கரன் பாதம்வணங்கிப் பின்
கார்த்திகேயனென்ற வேலவனைப்
பூர்த்தியாய்த்தொழுதே வாணிமலர்ப்பதம்
போற்றித்துதிசெய்துப் பாடுங்கடி (2)
பாடுங்கடியிந்தியா பட்டணமுள்ளோர்க்கும்
பகரவொணாத்தீவி லுள்ளவர்க்குத்
தேடுங்கடிகெட்ட லாகிரிமார்க்கத்தைத்
தெரியச்சொல்லி யடியுங்கடி (3)
அடியுங்கடிசிங்கை மாநகர்தன்னி
லடிக்கோர்சிவலிங்கம் யாவருக்கும்
குடியுமுண்டாக்க வமர்ந்தலிங்கமென்று
கோறியேவுள்செல்வோர் பாருங்கடி (4)
பாருங்கடியிந்தியா பட்டணந்தன்னிலே
பட்டைசாராயமுங் கள்தனையுந்
தாறுமாறாகக் குடியாதநேசர்க்குத்
தந்திடுதேசிங்கை லிங்கமுமே. (5)
லிங்கமென்றேநா னெடுத்துரைத்தேனென்று
நிந்தியாதேசிங்கைக் கன்னிமாரே
எங்கும்பார்த்தால்மதிக்கெட்டுப்போகக்கடை
யெண்ணக்கூடாம லிருந்ததாலே (6)
இருந்தாலல்லோ நவின்றேன்லிங்கமென்று
யினிமேல்வரும்மொழி கேட்டிடுவாய்
தெரிந்தவிஷயமே யாவர்க்குமிப்போது
செப்பத்துணிந்தேனடி மாதர்களே (7)
மாதர்களேநல்ல மானிடர்கெட்டிட
வாய்த்ததேலாகிரி வஸ்துபல
வேறுமுறையை யவரவர்தாஷிக்க
விந்தையுண்டாக்குதே நங்கைமாரே. (8)
நங்கைமாரேயெளவை கொன்றைவேந்தனில்
நவின்றபழமொழி கேட்டிருந்தும்
பொங்கமாய்ப்போதை குடிப்பதினாற்சிலர்
புலையுங்கொலைசெய்யப் போறாரடி (9)

போருமடிகோர்ட்டில் பொய்ச்சத்தியஞ்சொல்லவும்
பொல்லாக்கொலையுள் செய்வதற்கும்
வாராமடி யினிக் தப்பாமற்சாராயம்
வாங்கிக்குடித்ததன் வீட்டுக்கேட்டிகே (10)

வீட்டுக்குவக்கிலே பாதையிலேவெகு
வேடிக்கையாய்ப்பாட லாடல்களும்
காட்டியழுங்கூடச் செய்வதுபோய்ஒரு
சுமிவலிழுந்து கிடப்பாரடி. (11)

விழுந்து கிடப்பானைத் தூக்கிடவேகல்ல
வீற்பன்னரோடி. யெடுக்கையிலே
எழுந்துவுடனவர் யாரடாங்யென்று
வெட்டியுதைப்பார்கள் கன்னிமாரே (12)

கன்னிமாரேகெட்ட போதைமயக்கத்தால்
கண்டவர்சையி லுதையும்பட்டு
பின்னப்படச்செயில் போய்வந்தும்முன்போற்
பேசுமார்க்கம்விடார் பெண்டுகளே (13)

பெண்டுகளாயந்தப் பாவிகளுக்கேற்ற.
பிராணநாயகியி லுத்தமிகள்
தொண்டகணவருக் கென்றல்லோகூத்துநேற்
குத்திவக்தேசாத மாக்குவாரோ (14)

ஆக்கினைசாதத்திற் கன்புள்ளகாய்கறிக்
காகவொருக்காசு மில்லாமையால்
சிக்கிரமோடிக் கடன்வாங்கியானமுஞ்
செய்துமிருக்கின்ற வேளையிலே (15)

வேளையிலேதன் புருஷனெனும்பாவி
வேண்டியமட்டுங் குடித்திடவே
காலையைப்போலவர் வீட்டிற்குவந்துமே
கண்டிக்குஞாய மனேகமடி (16)

அனேகமடிகெட்ட தற்பசுகப்போதை
யாலிருவரின் மார்க்கஞ்சொன்றால்
கினைகளுள்ளோர்க வெலேபகைப்பாரிப்போ
செப்புமென்றன்கதை கேளுங்கண்ணே (17)

கண்ணேயென் றும்பல பெண்டுகளாயென்றன்
கருத்தைநன்று யெடுத்துச்சொல்ல
அன்னால் ர்பாதமே லாகினைவத்தேதலித்த
வயனிமேயார்பார்க்க வுனைப்பேனடி (18)

உனைப்பேனடிகூட ஞார்தனிக்வாழ்ந்திட்ட
[illegible]க்குலம்வன்னிய விபத்ரான்
பருவையிலிப் போதையால்கெட்டுமென்
பட்டணம்விட்டுக்கு வந்தேனடி (19)

வந்தேனடியிக்க மாதர்க்குள்ளே
[illegible]பிலப்ப மாமுமே
அந்தமாயாவனி [illegible]தியெழ்வாரமு
மறிவ ம்பதறுக் குத்தேன்றே. (20)

உகந்தென்றனாளின் றன்பலமேறலென்றன்
ஊழ்வினையோமத வானைவமோ
ஜெகந்தனில்நேச ரிரண்டோர்பெயர்கூடிச்
செப்பும்போதைவஸ்து தந்தாரோ (21)

தந்தாரோசாராயங் கள்ளுந்தூள் ளுமதைத்
தள்ளும்படிவேண்டிக் கேட்டேனென்றன்
சிந்தைகளிக்கவே சீர்திருந்திகெட்டச்
செய்கையைக்கைக்கொள்ள விட்டாரடி (22)

விட்டதோர்நாளைக் கழிந்துநற்புத்தியை
வேண்டியிராமற் றினமும்போதைத்
தொட்டதால்யாறு மறுபலித்துவந்த
தொல்லையைச்சற்கேளீர் மங்கைகளே (23)

மங்கைகளேமதி கெட்டுப்போகக்குரு
மாவிலத்தோர்சொல்வார் லாக்கிரியை
எங்குமறிந்துயான் பார்த்திருந்துங்கெட
யேனேபிறந்தேண்டி நங்கைகளே (24)

நங்கைகளேயென்ற னகண்விட்டிவ்விடம்
காணும்வருகின்ற நாட்களிலே
மங்களமாபென்னைப் போய்வாவென்றவ்விடம்
வார்த்தைசொலச்சில ரஞ்சினரோ (25)

அஞ்சினபேர்கள் மனங்களிக்கச்சத்திய
மைந்தினர்மக மாரியுடன்
பஞ்சவர்க்கேற்றயென் னன்னைபாஞ்சாலியின்
பாதஞ்சாட்சிகெட மாட்டேனென்றே (26)

என்றவுடனே கடவுள்செயலெண்ணி
யெல்லோருங்கூடி விடைகளீய
நன்றுடன்பெற்றுயா னின்னகர்வந்துயென்
நண்பரால்கெட்டேண்டி கோதைமாரே (27)

கோதைமாரேயொரு நண்பனைக்கூடியே
கூசாமல்ஜப்பான்கார் மாதர்களைக்
காதலுடனே யிருவர்புணர்ந்திட்ட
காரணமுங்கள்ளு போதையடி (28)

கள்ளுப்போதையது போதாதென்றேயினங்
கண்டவிடத்தினிற் சாராயம்
உள்ளபடியா யுணர்ந்துகணக்குப்பின்
னூற்றுப்பார்க்கவயர் பத்துதையோ (29)

பத்துதையோவயர் மெத்தவுங்காலையிற்
பாவைமாரேயா னெழுந்தவுடன்
புத்திகெட்டகள்ளை வைத்திருப்போர்கடை
போவதில்லையென்றே தானினைத்தே (30)

நினைத்தேபெருமதி வந்ததுபோலென்றன்
நெஞ்சைத்திருத்தியித் திரோகமெல்லாம்
அனைத்துவிட்டேபகற் காலமுகிந்தபின்
அந்திப்பட்டாற்கள்ளு சிந்தையடி (31)

சிந்தையடிகெட்ட லாகிரிவஸ்துவைச்
  செய்தாயிரவிற் குடித்துப்பின்பு
விந்தையாய்வார்த்தைகள் பேசித்தினந்தினம்
  வேடிக்கையாட்டமுஞ் செய்தேனே (32)

செய்தேனிதற்குமுன் னேழ்தரம்சம்பிக்கை
  செப்புஞ்சாராயங்கள் விட்டுவிட
மெய்தவிலூறின சாராயங்களொன்று
  மொள்ளகுடிக்கத் துணிந்தேனே (33)

துணிந்தேனேபொய்யானை வைத்திடவுந்தினந்
  துன்மார்க்கரேசர்சொற் கேட்டுகள்ளைப்
பனிந்தேகுடித்துத் திரிந்ததையின்றுயான்
  பாரிலுரைத்ததும் போதுமடி (34)

போதுமடிமிகப் புத்திகெட்டேயிந்தப்
  பூமியில்யாருமே பட்டபங்கம்
நாதனெனுமீசன் மேலானைவைத்துயான்
  நாவிற்சொல்வதைக் கேளுங்கடி (35)

கேளுங்கடிமுன் னேழ்தரம்போலவே
  கெட்டப்பொய்யானையீ தல்லவென்மம்
மாளும்வரையிலோர் நாளில்மதுவையும்
  மங்கிஷமுமுண்ணேன் பாவைமாரே (36)

பாவைமாரேசிங்கை மாநகர்தன்னிலே
  பண்ணினேனெட்டாவ தானையென்றே
கோவையிதழுள்ள பெண்களேயிந்தக்
  குவலயத்தோர்க ளறிந்திடவே (37)

அறிந்திடவேமுன் வாக்கிற்சொன்னதோ
  டாணையெல்லாம்பொய் யானதினால்
தெரிந்திடவேபாரில் யாவரும்பார்த்திடத்
  திரமாய்க்கொம்மியிற் பாடினேனே (38)

பாடினேன்போதையும் மாங்கிஷமுமிந்தப்
  பாரினில்யான்விட்ட நாள்கணக்கை
மூடருஞ்சொல்வேன் விபரமாய்க்கேட்டிட
  மொய்குழலேசெவி தந்திடுவீர் (39)

தந்திடுவீரின்று மிந்தவுலகுளோர்
  தாமுங்கேட்கவே சுட்டிருக்கு
குத்தல்லாதவோ ராண்டிற்குமாதமுன்
  கும்பமதிற்றேதி யொன்பதடி (40)

ஒன்பதாந்தேதிக்கு வாரஞ்சுக்கிரர்க்
  குகந்தநாளன்று யிரவினிலே
என்மனதிச்சையாய் போதைகள்சாப்பிட்டு
  யேகினேன்ஜப்பான் காரர்வீதியிலே (41)

ஜப்பான்கார்வீதிக்குச் சென்றங்குமாதனா
  சாய்டாக்குஞ்செய்திடும் பாவனைபோற்
றப்பிதமாக விண்டனைவல்லியைத்
  தக்கவிருநாட் கூடினனே (42)

கூடினேனேமுன் னிரண்டுதரமந்தக்
கோதைமானாயான் பலபலவாய்
நாடினேனேபின் மூன்றுவதாயிதை
நாமம்வைத்தேமறு காலையிலே (43)

காலையிலேசனி வாரமடிகெட்ட
காரணந்தீரத் தலைமுழுகி
வேலைக்குப்போயங் கிருக்கும்போதுமதி
வேணமட்டும்நன்று யோசித்ததே (44)

யோசித்துப்பார்க்க மனதுபுண்ணாகயென்
னூரைவிட்டிவ்விடம் வந்ததுவும்
நேசர்கள்சேர்ந்ததும் வெள்ளியழிந்ததும்
நீதிகெட்டவேலை யாச்சுதென்றே (45)

ஆச்சுதென்றேமதி பின்னுங்கெடுவதற்
காசையில்லாமலிவ் வாக்கினையென்
மூச்சுள்ளமட்டுமோர் நாட்களிலாவது
முன்போற்கருதுவ தில்லையடி (46)

இல்லையடிகெட வில்லையடியினி
யென்னுடன்கூடிடு மிஷ்டருடன்
தொல்லுலகுதனி லுள்ளவர்யாவர்க்குந்
தோற்றும்படியச்சி விட்டேனடி (47)

இட்டேனடியச்சி லியாவரும்பார்த்துமே
யென்றனையேளித மாய்நினைத்து
கெட்டவனென்றவர் திட்டினாலுமொரு
கேவலமெண்ணேன் புவிதனிலே (48)

புவிதனிலேயொரு பூனைநடத்தின
புன்மைகதையா னுரைக்கநீங்கள்
செவிகொடுப்பீரிந்த பாரினில்யாவருஞ்
செப்புவாருத்ராட்சப் பூனையடி (49)

பூனையடிதன் கழுத்திலோருத்ராட்சம்
பூண்டுயெலிக்கூட்டந் தன்னிற்சென்று
தானேசைவமென்று கூட்டத்திலுள்ளதை
சாப்பிட்டமார்க்கம்போ லிப்பொழுதே (50)

இப்பொழுதேயா னுரைத்தகதைபோல
யென்றனைக்காகிலுஞ் செய்தேனாகில்
தப்பாமல்காராம் பசுவினின்தோஷத்தில்
சார்ந்துகிடப்பேன் கருங்குயிலே (51)

கருங்குயில்போலப் புகலுநல்மாதரே
கற்றறிமுடனுன் செப்பினதில்
தெரிந்தகவிஞர் பிழைதிருத்தக்கோடி
தெண்டனிட்டேனென்று சொல்லுங்கடி (52)

சொல்லுங்கடிபின்னுஞ் சுத்தமில்லாததோர்
சொற்பிழைதன்னோ டெழுத்துப்பிழை
யெல்லாமறிந்திதை நன்றாய்ச்செயவின்னம்
யேற்றித்தொழுது முடித்தேண்டி (53)

முடித்தேண்டிகொம்மிக ளாம்பத்திமூன்றதில்
முக்கியமானதோர் விஸ்ணப்பம்
படித்தலமிதென்ற னேசர்க்குவந்தனம்
பாவைமாரேசெய் துரைப்பேனடி (54)

உரைப்பேனடிசில நேசர்தமக்குயென்
னூர்தனிலுமிந்தச் சிங்கையிலும்
நெறிபிசகிக்கெடும் துன்மார்க்கப்போதை
நீக்குவோர்சொல்லெனக் கேற்குமடி (55)

ஏற்குமடிசில ரிஷ்டப்படிநேச
ரென்னைக்கெடுக்க முயல்வோருக்கு
நாற்றிசையோர்களும் போற்றுமயேஸ்பார்
நாதாவினைவைத்தேன் நம்பிடவே (56)

நம்பிடவேபெரு வந்தனஞ்செய்நந்த
நண்பர்க்குரைத்தநோ ராணைமீறி
வம்புத்தனமாய்ப்பின் கெட்டநடத்தைக்கு
வாருமென்றால்வெகு கோரமடி (57)

கோரமடியிந்தக் குவலயத்திலெள்ளை
கூடிப்பிரியே லெனுமொழியைத்
தாரணியில்மீறி நடக்கேனென்றவர்க்குச்
சாற்றுங்கடிகதைப் பூர்த்தியென்றே (58)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூர்த்தியென்ற நூற்பிழையைப் பொறுக்கச் சிங்கைநகர்மேவும்
புலவோருக்கும்
நாற்றிசையும் புகழிந்தியா நகரிலுள கவிஞரொடு
நாவலர்க்கும்
நேர்த்தியுடன் பலநீவி லிருக்குங்கவி நிபுணருக்கும்
நிலைமையாகத்
தோத்திரமுஞ் செய்தேன்கூ டலூர்வீர பத்திரநற்
றோகைமாரே.

வாழி விருத்தம்.

தோகைமார்களே தம்பிமுகன்வாழி
வேகமாமயில் மீதேறுவோன்வாழி
நாகரீகநல் நாமகளும்வாழி
ஏகமாய்ப்புவியி லெல்லோரும்வாழியே.

நூதன விவேக லாகிரிச்சிந்து,

முற்றுப்பெற்றது.